**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

Off. : 0413-2333399, 2335530
2335328, 2335522
Fax : 0413-2333135
Res. : 0413-2339099

## பொங்கல் வாழ்த்துச்செய்தி

*Date :*

உலகத்தின் அனைத்து உயிரினங்களையும் உயிர்ப்பித்து காத்து வரும் சூரியனையும், அனைத்து மக்களுக்கும் உண்ண உணவினை உற்பத்தி செய்யும் உழவர்களையும், உழவர்களுக்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளையும் போற்றி வணங்கும் பொங்கல் மற்றும் உழவர் திருநாள் வாழ்த்துக்களை புதுச்சேரி மாநில அனைத்து மக்களுக்கும் மற்றும் உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமக்கு தேவையற்ற பொருள்களையும், தீமையான உணர்வுகளையும் தூக்கி எறிந்து போக்கிடும் போகி திருநாளை மாசற்ற நாளாக கொண்டாடுவோம்.

போகி, பொங்கல்த்திருநாள் மாட்டுப்பொங்கல் காணும் பொங்கல் எனும் உழவர்திருநாளை முப்பெரும்விழாவாக கொண்டாடி வருகிறோம் வீரத்தையும் காதலையும் மனிதநேயத்தையும் உழவர்பெருமக்களின் உற்சாகத்தையும் கால்நடைக்கு காட்டவேண்டிய நன்றி உணர்வையும் வெளிபடுத்துகின்ற சமூக பாரம்பரிய விழாவாகவும் தமிழ் கலாச்சார விழாவாகவும் பல நூறு ஆண்டுகளாக போற்றி கொண்டாடி வருகிறோம். மேலும் விஞ்ஞானி ரீதியாகவும் பூமி சூரியன் சுழற்சி மாற்றம் தொடங்கும் நாளாகவும் இந்த தைத்திருநாளை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கணித்து கொண்டாடிவருகிறார்கள். இத்தகைய பெருமைமிகு பொங்கல் திருநாளில் இந்திய பொருளாதாரத்தின் ஆணிவேராகத்திகழும் விவசாய பெருமக்களை வணங்கிப் போற்றுவோம்.

மேலும் எங்களது புதுச்சேரி அரசு விவசாயிகளின் துயரங்களையும் இழப்பீடுகளையும் முன்னதாகவே உணர்ந்து விவசாய கடன் வட்டித்தள்ளுபடி அளித்தும் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டு திட்டத்தின் பலனை வழங்கியும் விவசாய பாசனத்திற்கு இலவச மின்சாரம் வழங்கியும் உள்ளது.

ஏழைகளுக்கும் விவசாயிகளுக்கும் மகளிருக்கும் மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் உற்ற நண்பனாக திகழும் எங்கள் அரசு, புதுச்சேரி மாநிலத்தை வளர்ச்சி மிக்க மாநிலமாக உருவாக்க நாம் அனைவரும் இணைந்து செயல்பட உறுதி ஏற்போம்.

உலக தமிழர்கள் அனைவர் இல்லங்களிலும் நமது புதுச்சேரி அனைத்து தரப்பு மக்கள் இல்லங்களிலும் மகிழ்ச்சியையும் வளர்ச்சியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் பெருக்கிட வாழ்த்துகிறேன்.

(வே.நாராயணசாமி)